**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 73/2020 |
| Prosecution Witness | : | PW10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : பாலாஜி | Caste | : | | |
| Father's Name | : மதியழகன் | Calling | : | | |
| Village | : | Religion | : | | |
| Taluk | : | Age | : | 31 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.07.2023.**

***1, 2, 4 , 5, 6 9 , 10 11 எதிரிகள் வருகை. 3, 8, 7 எதிரி வருகை இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் நாதன்கோயில் கும்பகோணத்தில் குடியிருக்கின்றேன். நான் TATA ACE தனியார் வண்டியில் ஓட்டுனராக வேலை செய்கின்றேன். இறந்துபோன பிரசாத்தை தெரியும் அவர் எனக்கு மாமா மகன். இலுப்பக்கோரை என்ற ஊரில் ஒரு பெண்ணை லவ் செய்தார் என்று எனக்கு தெரியும். பிரசாத் அவர் லவ் செய்தபெண்ணை அழைத்துக்கொண்டு காங்கேயம்பேட்டையில் உள்ள அவரது அண்ணன் வீட்டிற்கு அழைத்து சென்றதாக கேள்விப்பட்டேன். பிறகு அந்த பெண் வீட்டை சேர்ந்தவர்கள் பெண்ணை காணவில்லைஎன்று புகார் கொடுத்திருந்தார்கள். பெண் வீட்டுக்காரர்கள் ஆயுதங்களுடன் சுற்றிக்கொண்டு இருந்தார்கள். மோகன் என்ற மாமா வீட்டிற்கு பிரசாத் அந்த பெண்ணை அழைத்துக்கொண்டு 11ம் தேதி திருப்பூருக்கு சென்றுவிட்டார். 12ம் தேதியன்று காலை என்னுடைய வாட்ச்சப்பிற்கு மணவெளியா பணவெளியா என்று தெரியவில்லை அந்த ஊரில் வெட்டாற்றில் பிரசாத் வெட்டிக்கிடப்பதாக படம் வந்தது. அதன்பிறகு நான் போய் பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 6, 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

11ம் தேதியும் 12ம் தேதியும் 6வது மாதம். நான் முதல்விசாரணையில்

சொன்ன லவ்செய்தது, ஆயுதங்களை வைத்துக்கொண்டு சுற்றியது, திருப்பூருக்கு போனது எல்லாம் நேரடியாக தெரியாது. கேள்விப்பட்டதுதான். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. என் உறவினர் ஒருவர் வாட்சப்பை எனக்கு அனுப்பினார். வாட்சப்பில் எனக்கு படம் வரவில்லை என்றும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரசாத் எனக்கு மாமா பையன் என்பதால் அவருக்காக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>7 வது எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>

இறந்துபோனவரின் உறவினர்களை எனக்கு தெரியும். ஆயுதங்களுடன் சுற்றிவந்தவர்களை நான் நேரடியாக பார்க்கவில்லை. கபிஸ்தலம் போலிசார்என்னை விசாரித்தார்கள். வேறு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. கபிஸ்தலம் போலிசார் எந்த தேதியில்விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. பிரசாத் இறப்பிற்கு முன்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இறந்தபிறகு 12 ம் தேதி என் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள். நடந்த சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.